[17th March 1965

Ceiling on holdings of Urban properties

* 258 Q.—Sri V. SANKARAN : Will the Hon. the Minister for Food be pleased to state—

(*a*) whethe rthe Union Government have called for the views of this Government on the fixation of ceiling on holdings of urban properties; and

(*b*) if so, the views expressed thereon?

கனம் திரு. வெ. ராமையா : (அ) இல்லே.

(இ) கேள்விக்கு இடமில்லே.

திரு. இராம அரங்கண்ணல் : நகரத்தில் இருப்பவர்கள் இத்தனை வீடுகள்தான் வைத்துக்கொள்ளலாம் என்று உச்ச வரம்பு கட்டும் உத்தேசம் சர்க்காருக்கு உண்டா ?

கனம் திரு. வெ. ராமையா : இந்த கருத்தை தனியாக மான்ய கோரிக்கை வரும்போது சொன்னுல் அரசாங்கம் கவனிக்கும்.

திரு. ஜே. மாதா கவுடர் : கிராமப்புறங்களிலே ஒருவருக்கு இவ்வளவு நிலம்தான் இருக்கவேண்டுமென்று உச்ச வரம்பு வைத்து இருக்கிருர்கள். நிலத்தை உபயோகிப்பதை விட சிலர் நகரங்களிலே வீடுகளே அதிகமாகக் கட்டி சொத்தாக வைத்து இருக்கிருர்கள். இதற்கு உச்ச வரம்பு கட்டுவது நியாயம்தானே. இதனை அரசாங்கம் பரிசீலிக்குமா ?

கனம் திரு. வெ. ராமையா : இந்தக் கருத்தை தனியாக மான்யக் கோரிக்கை அல்லது பொது விவாதம் வரும்போது சொன்னுல் அரசாங்கம் பரிசீலனை செய்து வேண்டிய நடவடிக்கை எடுத்துக்கொள்ளும்.

Arrears of agricultural income-tax

* 259 *Q*.—Sri M. V. KARIVENGADAM : Will the Hon. the Minister for Food be pleased to state the arrears of agricultural income-tax due as on 30th September 1964?

The Hon. Sri V. RAMAIAH : The arrear balance as on 30th September 1964 was Rs. 18,41,841·72.

திரு. எம். வி. கரிவேங்கடம் : பெரும் அளவிற்கு பாக்கி இருப்பதற்குப் என்ன காரணம் என்பதை கனம் அமைச்சர் விளக்குவாரா ?

கனம் திரு. வெ. ராமையா : 1964-ம் வருஷம் செப்டெம்பர் மாதம் 30-ம் தேதி அன்று பாக்கி உள்ள வரி நிலவரம் நான் கொடுத்தது. முழு வருஷ பாக்கி இல்லே. அந்தத் தேதியில் உள்ள பாக்கியைச் சொன்னேன். அதிகமாக பாக்கி தங்காமல் வசூல் செய்வதற்குத் தீவிர முயற்சி செய்து கொண்டிருக்கிறேம்.

திரு. எம். தண்டாயுதபாணி : இந்த அக்ரிகல்சுரல் இன்கம்டாக்ஸ், உச்ச வரம்பு நிலச் சீர்திருத்தச் சட்டத்திற்கு முன்பாக வந்தது. இந்த வருமான வரி பாக்கி இருப்பதாலும், இது மிகக் குறைவான வருவாய் தருவதாக இருப்பதாலும், இந்த வரியை வசூல் செய்ய செலவு அதிகமாக ஆகிறது என்ற காரணத்தால் இந்த வரியை ரத்து செய்ய அரசாங்கம் முயற்சி செய்யுமா ?

கனம் திரு. வெ. ராமையா : இப்போது அந்த முயற்சி இல்லே.

17th March 1965]

திரு. ஜே. மாதா கவுடர் : ஒன்று விவசாய வருமான வரியோடு நிலவரியை இணைத்து விவசாய வருமான வரியாக வைத்துக்கொள்ளலாம். அல்லது விவசாய வருமான வரியை ஒழித்துவிட்டு நிலவரியை வைத்துக் கொள்ளலாம். இரண்டில் ஒன்றை வைக்க அரசாங்கம் உத்தேசிக்குமா ?

கனம் திரு. வெ. ராமையா : இரண்டும் வேறுவிதமான வரிகள். ஒன்று வருமானத்தை அடிப்படையாகக் கொண்டு விதிக்கப்படுகிறது. மற்றொன்று நிலம் சொந்தமாக வைத்திருப்பவர்கள் பேரில் நில வரி வசூலிக்கப்படுகிறது. தற்போது இரண்டும் அமுலில் இருக்கிறது. இதை மாற்றுவதற்கு இப்போது உத்தேசம் இல்லை.

திரு. கோ. சி. மணி : நில உச்ச வரம்புச் சட்டத்தில் விதி விலக்கு அளிக்கப்பட்ட மடங்கள், தேவஸ்தானங்கள் இவைகளிலிருந்து இந்த வரி வசூலிப்பது பாக்கி இருக்கிறதா என அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமையா : அந்த விவரம் என்னிடத்தில் இல்லை. தனிக் கேள்வி போட்டால் விவரம் சொல்ல முடியும்.

திரு. கேஆர். ஆர்எம். கரியமாணிக்கம் அம்பலம் : சிறிய நிலச் சொந்தக்காரர்களுக்கு ஏற்படுகிற செலவைக் காட்டிலும், அதிகமாக நிலம் வைத்திருப்பவர்களுக்கு அதிகமான செலவு ஏற்படுகிறது என்பதை சர்க்கார் அறியுமா ? அப்படி என்றால் அதிக நிலம் வைத்திருப்பவர்களுக்கு இந்த நில வருமான வரியை ரத்து செய்ய யோசனை செய்யப்படுமா ?

கனம் திரு. வெ. ராமையா : கனம் அங்கத்தினர் கட்சியினுடைய கொள்கைக்குப் புறம்பான கேள்வி இது என்று நினைக்கிறேன். அவர்களுடைய கட்சிக் கொள்கை நிறைய நிலப்பரப்பு இருந்தால் அதிகமாக விவசாயம் செய்ய முடியும் என்பது. கனம் அங்கத்தினர் நிலம் அதிகம் இருந்தால் செலவு அதிகம், குறைந்த நிலம் இருந்தால் லாபம் என்று அவர்கள் கருத்தை மாற்றிக்கொண்டு சொன்னதற்கு உண்மையிலே நான் சந்தோஷப்படுகிறேன். நிலம் அதிகமாக இருந்தால் வருமானம் அதிகரிக்கும். ஆகவே அதிக வரி கொடுக்க சக்தி அவர்களிடம் இருக்கிறது.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : பதிமூன்று ஸ்டாண்டர்ட் எக்கருக்கு மேலே உள்ளவர்கள் நில வருமான வரி கொடுக்கிறார்கள். இது பரவலாக நடுத்தர குடும்பங்களைப் பாதிக்கிறது. இருபது ஸ்டாண்டர்டு எக்கருக்குக் குறையாமல் வைத்திருப்பவர்கள் மட்டும் இந்த வரி கட்ட வேண்டும் என்ற வரம்பு போட்டால் இம்மாதிரி பாக்கி இல்லாமல் வரி வசூல் செய்ய வழி இருக்காதா ?

கனம் திரு. வெ. ராமையா : இப்போது இருக்கக்கூடிய வரி பாக்கிக்கும் நாம் வைத்து இருக்கக்கூடிய உச்ச வரம்பிற்கும் சம்பந்தம் கிடையாது. பாக்கியை வசூல் செய்ய முடியும். இப்போது அரசாங்க முடிவுப்படி ஏற்கெனவே நிர்ணயம் செய்து இருக்கிற ஸ்டாண்டர்டு எக்கர் அளவை உயர்த்துவதாக இல்லை.

திரு. எம். தண்டாயுதபாணி : ஆண்டு ஒன்றுக்கு இந்த வருமான வரி எவ்வளவு வசூல் செய்யப்பட்டிருக்கிறது.

கனம் திரு. வெ. ராமையா : தனியாக கேள்வி போட வேண்டும்.

திரு. பி. கே. மூக்கையாத் தேவர் : நில உச்ச வரம்புச் சட்டம் நிறைவேற்றப்பட்டு சரியானபடி அமல் நடத்திய பிறகு இந்த வரிக்கு அவசியம் இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் கருதுகிறார்களா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : அதெல்லாம் அமலுக்கு வந்த பிறகு நிதி நிலைக்குத் தகுந்தவாறு, தேவைக்குத் தகுந்த முறையில் முடிவு செய்யவேண்டிய விஷயம். முன்கூட்டியே அவசியமா இல்லையா என்பதைச் சொல்லத் தயாராக இல்லை.

திரு. மு. பொ. வடிவேல் : விவசாய வருமான வரி மூலம் கிடைக்கக்கூடிய பணம் அதிகாரிகளுக்குக் கொடுப்பதற்குத் தான் சரியாக இருக்கும் என்பது உண்மையா ? அது உண்மையானால் அந்த இலாகாவை எதற்காக வைத்திருக்க வேண்டும் ?

கனம் திரு. வெ. ராமைய்யா : கனம் அங்கத்தினர் அவர்கள் சொல்வது உண்மையாக இருக்காது.

திரு. பி. முருகையன் : நிர்ணயிக்கப்பட்டிருக்கிற ஸ்டாண்டர்டுக்கு அதிகமாக நிலம் வைத்திருப்பவர்கள் விற்கக் கூடாது என்று சர்க்கார் உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள். அவர்கள் தாங்கள் வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுப்பதற்காக நிலங்களை விற்க வேண்டுமென்றாலும் விற்க முடியவில்லை. அந்த மாதிரி நிலையில் உள்ளவர்கள் வாங்கிய கடன்களைக் கட்டுவதற்காவது அதிகமாயுள்ள நிலத்தை விற்க அனுமதி கொடுப்பார்களா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : கனம் அங்கத்தினர் கூறுவது லாண்ட் சீலிங் சம்பந்தப்பட்ட சட்டத்தில் வரக்கூடியது. அந்தச் சட்டம் அமலுக்கு வரும் வரையில், உபரி நிலங்களை டிக்ளேர் செய்து முடிக்கும் வரையில் சுலபமாக விற்கவோ, வாங்கவோ இடம் இல்லை.

திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை : இப்போது விவசாயிகள் தனியாக விவசாயக் கணக்குகளைக் கொடுத்து அதன் பிறகு சர்க்கார் வரி விதிப்பது மிகவும் கஷ்டமாக இருக்கிறது. கணக்கு இல்லாத விவசாயிகள் அதிகமாக வரி கட்டவேண்டியிருக்கிறது. ஆகவே, நிலவரியோடு இந்த வரியையும் சேர்த்து வாங்குவது பற்றி சர்க்கார் யோசிக்குமா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : இப்போது இருக்கக்கூடிய சட்டப்படி கணக்குக் கொடுத்துத்தான் இந்த வரியைக் கட்ட வேண்டுமென்ற அவசியம் இல்லை. சிறு அளவுக்கு நிலம் வைத்திருக்கக்கூடியவர்கள் கம்பவுண்டிங் செய்து கொள்ளலாம் என்று சட்டத்தில் இடம் கொடுத்திருக்கிறார்கள். இதை அதிகமான பேர்கள் பயன்படுத்திக்கொண்டு வரியைக் கட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

Collections under the Madras Irrigation Act, 1955.

* 260 *Q.*—SRI M. V. KARIVENGADAM : Will the Hon. the Minister for Food be pleased to state the total collection up to 31st December 1964, under the Madras Irrigation (Levy of Betterment Contribution) Act, 1955?

THE HON. SRI V. RAMAIAH : Sir, no collection was made.

திரு. எம். வி. கரிவேங்கடம் : பெட்டர்மெண்ட் லெவி பிரகாரம் எவ்வளவு தொகை வசூலிக்கப்பட்டிருக்கிறது.

THE HON. SRI V. RAMAIAH : I have just now stated that no collection has been made.

திரு. எம். வி. கரிவேங்கடம் : ஒரு சில சட்டங்களைத் திருத்தி புதிதாக பெட்டர்மெண்ட் லெவி பற்றிய சட்டத்தை ஆறு மாதங்களுக்கு முன் இந்தச் சட்ட மன்றத்தில் நிறைவேற்றினோம். அதன்படி வரி வசூலிக்கப்பட்டதா ? வசூலிக்கப்பட வில்லையானால் அதற்குக் காரணம் என்ன ?